# உள்ளடக்கம்


எதார்த்த உலகில் நம்மை வாழ வைத்தார்

உலகிற்கு “ஆன்மா”வாக திகழ அழைப்பு

உலகிற்கு ஒப்புரவாக சோதனையை எதிர்ப்பது

எப்படி பற்றற்ற வாழ்வு வாழ்வது

பெரும்பரப்புத்தொற்றுநோயின் சவால்களுக்கு மத்தியில் வாழ்வது

புதிய கட்டுவரம்புகளுக்கு பொருத்தமாக்கி கொள்தல்

பற்றுறுதியா பேரச்சமா

இயேசு, நம் நம்பிக்கையைத் தொடங்கி வழி நடத்துபவரும் நிறைவு செய்பவரும்

அசாதாரணச்சூழலில் அருள்சாதன வாழ்வு

“விடியலிலும், காலையிலும் கடவுள் நம்மோடு”

வட மற்றும் தென் அரேபிய மறைமாவட்ட நம்பிக்கையாளர்களுக்கு

**ஆயர் அவர்களின் மேய்ப்புப்பணி திருமடல்**

# “உலகில், உலகினராக அல்ல”

*“அவர்களை உலகிலிருந்து எடுத்து விட வேண்டுமென்று*

*நான் வேண்டவில்லை; தீயோனிடமிருந்து அவர்களைக்*

*காத்தருள வேண்டுமென்றே வேண்டுகிறேன்.”*

*(யோவான் 17:15)*

கிறிஸ்துவில் அருமையான சகோதர சகோதரிகளே,

அமைதி உங்களுடன் இருப்பதாக!

1. கோவிட்-19 என்ற பெரும்பரப்புத் தொற்று நோய் (pandemic) நமது வாழ்வை பல வழிகளில் தொந்தரவு செய்துள்ளதால், கடினமான காலத்தை நாம் கடந்து சென்று கொண்டிருக்கிறோம். யோவான் நற்செய்தியிலிருந்து ஒரு சொற்றொடரை எனது தொடக்கப் புள்ளியாக எடுத்துக் கொண்டு சில சிந்தனைகளை உங்களுடன் பகிர்ந்து கொள்ள விரும்புகிறேன். இறுதி இராவுணவு மாலையில் இயேசு வேண்டிய நீண்ட வேண்டலில் நாம் இவ்வரிகளை காண்கின்றோம். தனது சீடர்களின் காலடிகளைக் கழுவிய பிறகு, தனது பாடுகளைத் துவங்குவதற்கு முன்பாக இயேசு தனது சீடர்களுக்காக தந்தையை நோக்கி வேண்டுகிறார். “அவர்களை உலகிலிருந்து எடுத்து விட வேண்டுமென்று நான் வேண்டவில்லை; தீயோனிடமிருந்து அவர்களைக் காத்தருள வேண்டுமென்றே வேண்டுகிறேன்.” (யோவான் 17:15)

## எதார்த்த உலகில் நம்மை வாழ வைத்தார்

2. தமது சீடர்கள் முழு நிறைவான உலகில் வாழ்வார்கள் என்று இயேசு நினைக்கவில்லை, மாறாக பாவத்தினால் பாதிக்கப்பட்ட உலகில் தான் வாழவேண்டுமென்று எண்ணினார். கிறிஸ்தவர்களாக நாமும் இவ்வுலகில் அதன் இயக்கத்தோடு இயைந்து செல்ல வேண்டுமேயொழிய, சிலசிமயங்களில் நம் விருப்பத்திற்கேற்ப இருக்கின்ற உலகில் வாழ இயலாது. கோவிட்-19 பெரும்பரப்புத்தொற்றுநோய் காலத்தில் இந்த எதார்த்தத்தை தான் மனதில் பதிவதைப் போன்று பட்டறிந்து கொண்டிருக்கின்றோம். இயேசு கிறிஸ்துவை நம்புவதால், அவருடைய திருஅவையின் உறுப்பினராக இருப்பதால் தன்னியக்கமாக சொர்க்கத்தில் நமக்கு இடம் கிடைக்கப் போவதில்லை.

கோவிட்-19லிருந்து அல்லது மற்ற பேரிடர்களிலிருந்து நாம் காப்பாற்றபட்டிருக்கின்றோமென்றால், நாம் கடவுளை நம்பியதால் மட்டுமல்ல. ஒவ்வொருவரையும் போல, கறைப்பட்ட இவ்வுலகில் உள்ள அனைத்து இடர்களை நாமும் சந்தித்தாக வேண்டும். இயேசு கிறிஸ்துவின் மீது நம்பிக்கை வைத்திருக்கின்ற காரணத்தினால் இறைவனிடமிருந்து நமக்கு சிறப்புச் சலுகை கிடைக்கும் என்று எதிர்ப்பார்த்து நினைத்துக் கொண்டிருக்கக்கூடாது. தாம் பாடுபடுவதற்கு முன்பு, தனது இறைவேண்டலில், இயேசு தமது தந்தையிடம், தமது சீடர்களை உலகிலிருந்து எடுத்து விட வேண்டுமென்று கேட்கவில்லை. “தீயோனிடமிருந்து அவர்களைக் காத்தருள” வேண்டுமென்றே வேண்டினார். “தீயோன்” என்பது நோய், விபத்து, பஞ்சம், போர், மற்றும் இவைப் போன்ற துன்பங்களை குறிப்பது அல்ல; மாறாக தனது பிடியில் நம்மை எடுத்துக் கொண்டு, இறைவனுடைய நட்புறவிலிருந்து நம்மைப் பிரித்து, நம் ஆன்மாவை அபாயகரமான நோய்க்கு உள்ளாக்கும் அலகையை குறிக்கின்றது.

3. இந்த பெரும்பரப்புத்தொற்றுநோயினால் பாதிக்கப்படாதவாறு அதன் பிடியிலிருந்து வெளியே வரவே நாம் வேண்டுகின்றோம், வருவோம் என உறுதியாக நம்புகின்றோம். ஆனால் யாராலும் உறுதியாய் நான் தப்பிவிடுவேன் என்று கூற முடியாது. சமய நம்பிக்கை உடையவர், சமய நம்பிக்கையற்றவர் எவராலும் கூற இயலாது. இதைப் பொறுத்தவரை நாம் அனைவரும் ஒரேவிதமான அடிப்படைச் சூழலைப் பகிர்ந்து கொண்டிருக்கிறோம். நம்மையும், மற்றவர்களையும் பாதுகாத்து கொள்ள செய்ய வேண்டிய அனைத்து முயற்சிகளையும் மேற்கொள்ள வேண்டிய நிலையில் நாம் இருக்கின்றோம். இப்பெரும்பரப்புத்தொற்றினால் உயிர் இழக்கும் அபாய நிலையிலிருப்பவர்களை காப்பாற்றும் முயற்சியில் தங்களையே இரவு, பகலாக அர்ப்பணித்திருக்கும் அனைவருக்கும், நமக்கு பாதுகாப்பு தரும் நம்பிக்கையை கொடுக்கக்கூடிய தடுப்பூசி மருந்தினை கண்டுபிடிக்கும் தீவிர ஆராய்ச்சி முயற்சியிலிருக்கும் அனைவருக்கும் நாம் நன்றியுள்ளவர்களாய் இருக்கின்றோம். எனினும் இப்பெரும்பரப்புத்தொற்று, படைப்பாளராகிய கடவுள் நமக்கு தந்திருக்கும் “பொது இல்லத்தை” கிறிஸ்தவர்களாகிய நாம் மற்ற அனைத்து மனிதர்களோடும் பகிர்ந்து கொள்கின்றோம் என்ற உண்மையை நமக்கு ஆணித்தரமாக நினைவூட்டுகின்றது. பெரும்பரப்புத்தொற்று, சமய நம்பிக்கையுடையவர் மற்றும் சமய நம்பிக்கையற்றவர்களிடையே எந்தவொரு வேறுபாட்டையும் உருவாக்குவது கிடையாது.

4. இருப்பினும் கிறிஸ்தவர்களாகிய நாம் இந்த சூழமைவை எப்படி எதிர்கொள்வது? நமது மனதை தொந்தரவு செய்யக்கூடிய கேள்விகளுக்கும், நமது இதயங்களில் எழும்பக்கூடிய எண்ணற்ற ஐயங்களுக்கும் விடைகள் என்ன? போன்ற கேள்விகள் எழத்தான் செய்கின்றன. வரலாற்றை திரும்பிப் பார்த்தால், தொடக்கத்திலிருந்தே கிறிஸ்தவர்கள், உலகத்தில் இருப்பது, ஆனால் உலகத்தினராய் இல்லாதிருப்பது என்பதற்கு அர்த்தம் என்ன? என்பதை தங்களது வேதனை மிகுந்த பட்டறிவினால் கற்றுக் கொள்ள வேண்டியிருந்தது. கிறிஸ்துவை

பின்பற்றியவர்கள் அனைத்துச் சூழமையையும் திறந்த மனப்பான்மையுடன் சந்தித்தாலும், கிறிஸ்தவர்களுடைய புதிய நம்பிக்கையை தோழமை உணர்வுடன் ஏற்று கொண்டார்கள். எனினும் நம்பிக்கையாளர்கள் தாங்கள் வாழ்ந்த சமூகத்திலிருந்து விலகவில்லை, கூட்டுத் தன்னிரக்கத்தில் விழவுமில்லை. மாறாக, தொடக்கக்காலத்திலிருந்தே, பொது வாழ்க்கையிலும், சமூக வாழ்விலும் கிறிஸ்தவர்கள் தங்களையே ஈடுபடுத்திக் கொண்டவர்களாகவும், தங்கள் வாழ்க்கையையே அதற்காக அபாய நேர்வுக்குள்ளாக்கிக் கொள்வதையும் நாம் காணலாம். அவர்களுடைய புறத்தோற்றத்தில், அவர்கள் சார்ந்திருந்த மக்களிடமிருந்து தங்களை தனிப்படுத்திக் கொள்ளவில்லை; ஆனால் ஒழுக்கமற்ற வாழ்க்கையினால் வேறுபட்டச் சமூகமாக திகழ்ந்த பிற இனத்தவர்களோடு வாழ்ந்த போது மட்டும் வேறுபட்ட வாழ்க்கை வாழ்ந்தார்கள்.

## உலகிற்கு “ஆன்மா”வாக திகழ அழைப்பு

5. மேற்கூறியக் கூற்றை சற்று ஆழமாக சிந்திக்க, கிறிஸ்துவின் இறப்பிற்கு பிறகு ஏறக்குறைய 130-160 ஆண்டுகளில் எழுதப்பட்ட தொன்மையான உரைமூலத்திலிருந்து ஒரு பெரும் பகுதியை குறிப்பிட விழைகின்றேன். டயோக்னிட்டஸ் (Diognetus) என்று அழைக்கப்பட்ட ஒரு மனிதனுக்கு எழுதப்பட்ட மடல் வடிவில் உள்ள இப்பகுதி எப்படி இந்தச் சூழலுக்கேற்ப நம்மையே ஈடுபடுத்திக் கொள்வது என்பதை படம் பிடித்து காட்டுகிறது. அந்த நேரத்தில் உலகில் வாழ்ந்த கிறிஸ்தவர்களுடைய வாழ்வைப் பற்றி பேசுகின்ற பொழுது, ஆசிரியர் கீழ்கண்டவாறு எழுதுகின்றார்:

> *தேசியஇனம், மொழியினாலோ, அல்லது வழக்கத்தினாலோ மற்ற மனிதர்களிடமிருந்து கிறிஸ்தவர்களைப் பிரித்தறிய இயலாது. அவர்களுக்கே உரிய தனி நகரங்களை அவர்களுடைய குடியேற்றயிடமாக கொண்டிருக்கவில்லை; அன்னியப் பேச்சு வழக்கு மொழியில் பேசவில்லை; சில அயல்நாட்டு வாழ்க்கை முறையை பின்பற்றவில்லை. மற்ற சில மக்களை போன்றல்லாது, முற்றிலுமான மனிதக் கோட்பாடுகளை அவர்கள் ஆமோதிக்கவில்லை. உணவு, உடை, வாழ்க்கை முறையை பொறுத்தவரை, கிரேக்கமாக இருந்தாலும், அல்லது அந்நிய நாடாக இருந்தாலும், எங்கே வாழ்ந்தார்களோ, அந்த நகரங்களின் வாழ்க்கை முறையையே பின்பற்றி வாழ்ந்தார்கள்.*
>
> *எனினும் அவர்கள் வாழ்வில் ஒரு சில தனிச் சிறப்புகள் காணப்பட்டன. கடந்து செல்பவர்களைப் போன்றே அவர்களுடைய நாடுகளில் வாழ்ந்தார்கள். குடிமக்களைப் போன்றே அனைத்திலும் செயல்பட்டார்கள்; ஆனால் அந்நியர்களுடைய அனைத்து இயலாமையின் கீழ் பணிபுரிந்தார்கள். எந்த நாடாக இருந்தாலும், அது அவர்களுடைய தாய் நாடாக இருந்தது, ஆனால் அவர்களுடைய தாய் நாடு அந்நிய நாடாகவே இருந்தது.*

*மற்றவர்களைப் போன்றே திருமணம் செய்து கொண்டார்கள்; பிள்ளைப் பேற்றை அடைந்தார்கள். ஆனால் அவர்களை வெளியில் காட்டவில்லை. அவர்கள் தங்களது உணவை பகிர்ந்து கொண்டார்கள்; ஆனால் தங்களது மனைவிகளை அல்ல.*

*ஊனியல்பில் அவர்கள் வாழ்கின்றார்கள், ஆனால் ஊனியல்பின் விருப்பங்களினால் ஆட்கொள்ளப்படவில்லை. இந்த மண்ணில் அவர்களுடைய நாள்களை கடத்துகிறார்கள், ஆனால் அவர்கள் விண்ணகத்தின் குடிமக்கள். சட்டங்களுக்கு கீழ்படிபவர்கள், ஆனால் சட்டங்களையும் விஞ்சும் நிலையில் வாழ்ந்தார்கள். அனைவரையும் கிறிஸ்தவர்கள் அன்பு செய்தார்கள், ஆனால் அனைவரும் அவர்களை துன்புறுத்தினார்கள். அவர்களை புரிந்து கொள்ளாததால் கண்டனம் செய்தார்கள். மரணத்திற்குள்ளாக்கினார்கள், ஆனால் மீண்டும் வாழ்விற்கு உயர்த்தப்பட்டார்கள். ஏழ்மையில் வாழ்ந்தார்கள், ஆனால் பலரையும் வளப்படுத்தினார்கள்; கைவிடப்பட்டவர்களாக இருந்தார்கள், ஆனால் ஒவ்வொன்றிலும் மிகுதியே பெற்றிருந்தார்கள். அவமரியாதையினால் துன்புற்றார்கள், ஆனால் அதுவே அவர்களது மகிமை. அவமதிக்கப்பட்டார்கள், ஆனால் கொள்கையில் நிலைத்து நின்றார்கள். நிந்தனைக்கு வாழ்த்து அவர்களது பதில். அவமானத்திற்கு பணிவிணக்கமே அவர்களது மறுமொழி. அவர்கள் செய்த நன்மைகளுக்கு, குற்றவாளிகளுக்கான தண்டனையைப் பெற்றார்கள், ஆனால் அப்போது கூட வாழ்வின் கொடையைப் பெற்றுக் கொண்டது போல அவர்கள் களிப்புற்றார்கள்...*(டயோக்னிட்டஸ்க்கு எழுதிய மடலிலிருந்து)

6. குழுவாத வழியில் எவ்வாறு கிறிஸ்தவர்கள் தாங்கள் வாழ்ந்த சமூகம் மற்றும் உலகிலிருந்து தங்களை பிரித்துக் கொள்ளவில்லை என்பதை மேற்கூறிய தொன்மைக் காலச் சான்று நமக்கு வெளிப்படுத்துகின்றது. அவர்களுடைய வாழ்க்கை முறை தான் அவர்களை வேறுபடுத்தி காட்டியது. அதிகாரத்தை ஆராதனை புரிந்த, பேரரசரை கடவுளாக மதித்த மக்கள் வாழ்ந்த கலாச்சாரத்தில், தங்களுடைய வாழ்வும், வழிபாடும் உண்மையாக இறைவனுக்கு மட்டுமே என்று கிறிஸ்தவர்கள் கூறினார்கள். இந்த நம்பிக்கைக்காக அவர்கள் கொல்லப்பட்டாலும் தங்களது வாழ்க்கை முறையை அவர்கள் மாற்றிக் கொள்ளவில்லை. கருச்சிதைவு, மழலைக் கொலை போன்றவற்றை பொது வழக்கமாக கொண்டிருந்த சமூகத்தில், கருப்பையின் கனியை தூயதாகக் கருதினர். பாலியல் ஒழுக்கமின்மையை பொது வழக்கமாக கொண்டிருந்த பண்பாட்டில், வார்த்தையிலும், வழக்கத்திலும் திருமணக் கூட்டணைப்பை மட்டுமே வலியுறுத்தினர். மக்களைப் பிரித்தாள்வதை அமைப்பு முறையாக கொண்டிருந்த காலத்தில், தங்களது சமூக பொருளாதார நிலைப்பாட்டில், அல்லது தங்களது மொழிசார், கலாச்சார சார்புடைமையிலும் கிறிஸ்தவர்கள் தங்களை சகோதர, சகோதரிகளாக எண்ணினார்கள். எதார்த்தம் எப்பொழுதும்

முழுநிறைவை ஒத்திருக்க முடியாது. இருப்பினும், முழுவதும் வேறுபட்ட வாழ்வின் வித்து இயேசு கிறிஸ்துவின் வார்த்தை மற்றும் முன் உதாரணத்திலும் வேரூன்றியதால் பரந்து விரிந்து கனி கொடுக்க முடிந்தது. போராட்டங்களுக்கிடையிலும், கிறிஸ்தவர்கள் தங்களுடைய தனித்தன்மையில் பெருமை கொண்டார்கள். எண்ணிக்கையில் குறைவாக இருந்தாலும், அவர்களால் உலகை மாற்ற முடியும் என்று உறுதியாக இருந்தார்கள். டயோக்னிட்டஸ்க்கு எழுதிய மடலுக்கு மீண்டும் செவிமடுப்போம்.

> *பொதுவாக சொல்ல வேண்டுமென்றால், உடலுக்கு ஆன்மா எப்படியோ, அப்படியே உலகிற்கு கிறிஸ்தவர்கள் என்று சொல்லலாம். உடலிலுள்ள எல்லா பாகமும் வெவ்வேறாக இருந்தாலும் எல்லா பாகத்திலும் ஆன்மா இருப்பது போல, கிறிஸ்தவர்கள் உலகிலுள்ள எல்லா நகரங்களிலும் காணப்படுகிறார்கள்; ஆனால் உலகுடன் அடையாளப்படுத்தப்பட முடியாது. காணக்கூடிய உடல் காண இயலாத ஆன்மாவை உள் அடக்கி வைத்திருப்பது போல, கிறிஸ்தவர்கள் உலகில் வாழ்வது போல காணப்படலாம்; ஆனால் அவர்களது சமய வாழ்க்கை மறைவாகவே இருக்கின்றது. ஆன்மா உடலுக்கு ஏதேனும் காயம் ஏற்படுத்தியதால் அல்ல, மாறாக உடல் அனுபவிக்கின்ற இன்பத்திற்கு ஆன்மா தடை விதிப்பதால், உடல் ஆன்மாவை வெறுக்கின்றது, அதற்கெதிராக போராடுகின்றது. அதுபோன்றே, கிறிஸ்தவர்கள் ஏதோ உலகத்திற்கெதிராக ஏதோ தவறு புரிந்ததற்காக அல்ல மாறாக இன்பம் துய்ப்பதற்கெதிராக அவர்கள் இருப்பதால், உலகமும் கிறிஸ்தவர்களை வெறுக்கின்றது.*
>
> *உடல் வெறுத்தாலும், ஆன்மா உடலையும் அதன் உறுப்புகளையும் அன்பு செய்வது போல, கிறிஸ்தவர்களும் அவர்களை வெறுப்பவர்களை அன்பு செய்கின்றார்கள். உடலுக்குள் அடைக்கப்பட்டிருக்கின்ற ஆன்மா எவ்வாறு உடலை ஒருங்கிணைத்து வைத்திருக்கின்றதோ, அது போலவே சிறையிலிருப்பதை போல உலகக் காவலில் வைக்கப்பட்டிருக்கின்ற கிறிஸ்தவர்களால் உலகமும் ஒருங்கிணைக்கப்பட்டிருக்கின்றது. சாகாத் தன்மை கொண்டிருந்தாலும் ஆன்மா எவ்வாறு சாகும் தன்மை கொண்ட உடலை இருப்பிடமாக கொண்டிருக்கின்றதோ அதைப் போலவே கிறிஸ்தவர்களும் அழியக் கூடியப் பொருள்கள் மத்தியில் வாழ்ந்தாலும், மாற்றம், அழிவிலிருந்து விடுதலைப் பெற்று வாழும் விண்ணகத்தை எதிர் நோக்கியிருக்கிறார்கள். உணவு, நீர் போன்றவற்றின் இழப்பிலிருந்து ஆன்மா பயன் பெறுவதை போல, துன்பங்களினால் கிறிஸ்தவர்கள் வளம் பெறுகின்றார்கள். இதுவே கிறிஸ்தவர்களின் உயர்ந்த மற்றும் இறைவனால் நியமிக்கப்பட்ட செயல்பாடு. இதிலிருந்து விடுவித்துக் கொள்ள அவர்களுக்கு அனுமதியில்லை.* (டயோக்னிட்டஸ்க்கு எழுதிய மடலிலிருந்து)

**உலகிற்கு ஒப்புரவாக சோதனையை எதிர்ப்பது**

7. தொடக்க காலக் கிறிஸ்தவர்களை போன்று, கத்தோலிக்க கிறிஸ்தவர்கள் என்ற தனித் தன்மையில் நாம் பெருமையடைவதில்லையோ என்று சில சமயங்களில் நான் ஆச்சரியப்படுவதுண்டு. இது ஒரு வேளை நம்மிடையே, திரு அவைக்குள் நிகழ்ந்த, இன்னும் நிகழ்ந்து கொண்டிருக்கின்ற மறுக்க முடியாத அவதூறுகளினால் இருக்கலாம். இது போன்ற அதிர்ச்சிகளினால் முடமாக்கப் பெற்ற நாம் அமைதியுடனும், எதிர் நோக்குடனும் வாழ இயலாமல் போய் விடுவதை தூய பவுல் பிலிப்பியருக்கு எழுதிய திருமுகத்தில் விவரிக்கின்றார். “கடந்ததை மறந்து விட்டு, முன்னிருப்பதைக் கண்முன் கொண்டு, பரிசு பெற வேண்டிய இலக்கை நோக்கித் தொடர்ந்து ஓடுகிறேன். கிறிஸ்து இயேசுவின் மூலம் கடவுள் எனக்கு மேலிருந்து விடுவிக்கும் அழைப்பே அப்பரிசாகும். எனவே நம்மில் நிறைவு அடைந்தோர் யாவருக்கும் இத்தகைய மனநிலையே இருத்தல் வேண்டும்” (பிலி 3:13-15). கடந்த காலத் தவறுகளை குறிப்பிடுகின்ற அதே வேளையில், நம் இறைவன் இயேசு கிறிஸ்துவின் நற்செய்தியை துணிவுடன் நிகழ் காலத்தில் வாழ அழைக்கப்படுகிறோம். இன்றைய உலகின் சவால்களை சந்திப்பதோடு, நம்மை தடம் மாற்றுகின்ற வழிகளை தவிர்க்க வேண்டும். சில குழுக்கள் செய்வதை போல, நம்மை சூழ்ந்துள்ள சமூகத்திலிருந்து விலகி நம்முடைய துறவறக் குழாமில் ஒளித்து கொள்வதில் ஒரு தவறு நடக்கலாம். அத்தகையவர்கள் விமர்சன பார்வையாளர்கள் போல, உலகின் நீதித் தலைவர்களைப் போல தங்களையே திருப்திப்படுத்திக் கொள்பவர்களாக சமூகத்திலிருந்து விலகி வாழ்வார்கள். மற்றொரு தவறு என்னவென்றால், சூழ்ந்திருக்கின்ற உலகோடு கரைந்து, பின்பற்றுகின்ற ஒழுங்குகள் நல்லதா அல்லது கெட்டதா என்று பகுத்தாய்வு மேற்கொள்ளாமல், ஒவ்வொருவரையும் போல நடந்து கொள்வது. அவ்வாறு வாழ்ந்தால் நாம் நம்முடைய கிறிஸ்தவ தனித்தன்மையை இழந்து விடுவோம். இயேசு நம்மை எச்சரிக்கின்றார். “உப்பு உவர்ப்பற்றுப் போனால் எதைக் கொண்டு அதை உவர்ப்புள்ளதாக்க முடியும்? அது வெளியில் கொட்டப்பட்டு மனிதரால் மிதிபடும்; வேறு ஒன்றுக்கும் உதவாது”(மத் 5:13). இரண்டு வழிகளுமே உண்மையான கிறிஸ்துவ வழிகளல்ல. நாம் அனைவரும் “உலகிற்கு ஒளியாக”(மத் 5:14) மற்றும் “மண்ணுலகிற்கு உப்பாக” (மத் 5:13) இருக்க இயேசு விரும்பினார். ஒளியாக, உப்பாக இவ்வுலகில் நாம் செயல்பட அவர் விரும்பினார். எனவே தான் தமது பாடுகளுக்கு முன் நமக்காக இயேசு மன்றாடினார். “அவர்களை உலகிலிருந்து எடுத்து விட வேண்டுமென்று நான் வேண்டவில்லை; தீயோனிடமிருந்து அவர்களைக் காத்தருள வேண்டுமென்றே வேண்டுகிறேன். நான் உலகைச் சார்ந்தவனாய் இல்லாதது போல் அவர்களும் உலகைச் சார்ந்தவர்கள் அல்ல. உண்மையினால் அவர்களை உமக்கு அர்ப்பணமாக்கியருளும். உமது வார்த்தையே உண்மை” (யோவா17 15-17). எனவே, ஒவ்வொருவரையும் போலவே நாம் இவ்வுலகில் வாழ்ந்தாலும், முற்றிலும் வேறுபட்ட முறையில் நாம் வாழ்கின்றோம். “உண்மையினால் அர்ப்பணமாக்கப்பட்ட” மக்களாக நாம் வாழ்கின்றோம். உண்மையினால் அர்ப்பணமாக்கப்படுதல் என்றால் “நானே உண்மை” (யோவா 14:6) என்று கூறியவரால் தூயவராக்கப்படுதல் என்று அர்த்தம்.

8. இந்த பணியினை செய்த கிறிஸ்தவர்களை தூய பவுல் எதிர் கொண்டதை உரோமையருக்கு எழுதிய மடலில் விளக்குகின்றார்: “இந்த உலகத்தின் போக்கின்படி ஒழுகாதீர்கள். மாறாக உங்கள் உள்ளம் புதுப்பிக்கப் பெற்று மாற்றம் அடைவதாக! அப்போது கடவுளின் திருவுளம் எது எனத் தேர்ந்து தெளிவீர்கள். எது நல்லது, எது உகந்தது, எது நிறைவானது என்பதும் உங்களுக்குத் தெளிவாகத் தெரியும்” (உரோ 12:2). நமது உள்ளம் புதுப்பிக்கப் பெற்று மாற்றம் அடைவதற்கு பதிலாக எவ்வாறு இவ்வுலகிற்கு இணங்கி போகிறது என்பதை நமது அனுபவத்திலிருந்து நாம் அறிவோம். அறநெறி மற்றும் சார்புக் கொள்கை கோட்பாடுகளின் வலிமையான சுழற்சி நம்மை இறைவனின் கட்டளைகளின் வழியில் வாழ்வதிலிருந்து தடம் மாற்றக் கூடிய உலகில் நாம் வாழ்கிறோம். திருத்தந்தை பிரான்ஸிஸ் இந்த ஆபத்தைக் குறித்து அடிக்கடி பேசுகிறார். 2020ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 13ஆம் நாளில், சாந்தா மார்த்தாவில் ஆற்றிய காலை மறையுரையில் குறிப்பிட்டதை உதாரணமாக குறிப்பிடுகிறேன், சிறந்த ஞானமுடையவராக இருந்தாலும், வழி தவறி செல்வதிலிருந்து தன்னை பாதுகாத்துக் கொள்ளாத சாலமோன் மன்னனைப் பற்றி அவர் கூறினார். இறைவனிடமிருந்து ஞானத்தை கேட்டு பெற்றுக் கொண்ட “நல்ல சிறுவனாக” பெரிய மன்னன் துவங்கினார். ஆனால் சாலமோனின் இதயம் வலுவிழந்தது. காரணம் பிற கடவுள்களுக்கு பணி புரிந்த அவருடைய மனைவியரை, பிற கடவுள்களின் உருவச் சிலையை வழிபட அவரைத் தூண்டும் அளவுக்கு அவர் அனுமதித்தது தான். திருத் தந்தை குறிப்பிடுகிறார், “அவர் செய்த தவறு ஒரு நாளிலிருந்து அடுத்த நாளுக்கு செல்லக் கூடிய சமய நம்பிக்கைத் துரோகம் அல்ல”. அவர் பாவத்திற்குள் சறுக்கி விழுகிறார். வழி தவறிச் சென்றதற்காக ஆண்டவர் சாலமோனை கடிந்து கொள்கிறார்: “உன் இதயத்தை நீ திருப்பி விட்டாய்”. நமது வாழ்விலும் இது நடைபெறுகிறது. நம்மில் பலரும் பெரிய பாவங்களை செய்வதில்லை. ஆனால் “மயக்க மருந்தினால் வீழ்ச்சியடைவதை போன்றது இது, எனவே மெதுவாக நம்மையே அதில் விழச்செய்யக் கூடிய” ஆபத்து உள்ளது. இதை உணராமலே நாம் அதனைச் சார்ந்து கொண்டு, கடவுளிடம் நாம் கொண்டுள்ள நம்பகத் தன்மையை இழந்து விடுகிறோம். “எத்தனை முறை நாம் இறைவனை மறந்து விட்டு பணம், வெறும் பகட்டு, செருக்கு போன்ற பிற கடவுள்களோடு ஒப்பந்தம் செய்கிறோம்?” “அனைவரும் இதை செய்கிறார்கள்”. “இது சரி என்று நம்பிக் கொண்டு” நம்மை உலகப் பற்றிற்கு இந்த வழுக்கலான சறுக்கல் நம்மை இட்டு செல்லும் என்று திருத்தந்தை பிரான்ஸிஸ் விவரிக்கிறார். இத்தகைய விதத்தில் நம்மையே நியாயப்படுத்திக் கொள்வதால், கடவுளுக்கு உண்மையுள்ளவர்களாக இருப்பதிலிருந்து விலகி, நவீன சிலை வழிபாட்டை தழுவுகின்றோம். (L’Osservatore Romano, வார ஆங்கிலப் பதிப்பு. எண்12, 20 மார்ச் 2020)

9. சாலமோனுக்கு நிகழ்ந்தது போல நம்மில் எவருக்கும் நிகழலாம். ஒவ்வொருவரையும் மகிழ்விக்கும் பொருட்டு, பெரும்பாலும் நாம் அவர்களுடைய கடவுள்களை நம் கடவுள்களாக்கிக் கொள்கின்றோம். நம் அகத்திலிருந்து அதாவது “தூய ஆவியின் வழியாய்க் கடவுள் நம்மீது பொழிந்துள்ள அன்பிலிருந்து” (உரோ 5:5) வலிமை பெறவில்லையென்றால் போராட்டத்தில் நாம்

தோல்வியுறுவோம். மாற்றம் பெறுவதை விட சார்ந்திருக்கும் ஆபத்தில் எளிதாக சிக்கிவிடுவோம் என்பதை நாம் நன்கறிவோம்! உதாரணமாக, அனைவரும் பொய் சொல்கிறார்கள், ஏன் நான் எப்பொழுதும் உண்மையை சொல்ல வேண்டும்? அனைவரும் ஏமாற்றுகிறார்கள், நான் ஏன் அதனை செய்யக் கூடாது? யாரெல்லாம் தன்னுடைய வாழ்க்கைத் துணைவருக்கு, துணைவியருக்கு நம்பிக்கைக்குரியவர்களாக இருக்கிறார்களோ, அவர்களெல்லாம் முட்டாளாக கருதப்படுகின்றார்கள். எனவே ஏன் நானும் வழி தவறிச் செல்லக் கூடாது? நம்பிக்கையைப் பற்றிய கேள்வி எழும் போதும் இத்தகைய பதிலே வருகின்றது. இயேசு பற்றி எத்தனையோ கொள்கைகள், சித்தாந்தங்கள் உள்ளன, ஏன் பழமையான நம்பிக்கை அறிக்கையில் உள்ள வார்த்தைகளை இன்னும் நம்ப வேண்டும்? கத்தோலிக்க திருஅவையை, அதன் அவதூறுகளை கேலி கிண்டல் செய்தாலும், நாவன்மை மிக்க மறை பரப்புரையாளரை பின்பற்றுவது நல்லதல்லவா? அனைவரும் அவரவரது விருப்பங்களை பின்பற்றுகின்றார்கள், நான் ஏன் மற்றவரைப் பற்றி அக்கறை கொள்ள வேண்டும்? இந்த உதாரணங்களின் பட்டியல் பன்மடங்காக நிறைவுறாமல் நீண்டு கொண்டே போகலாம்.

## எப்படி பற்றற்ற வாழ்வு வாழ்வது

10. நமது விழுமியங்களைப் போன்றில்லாமல் வேறுபட்ட விழுமியங்களை பின்பற்றுகின்ற உலகில் எவ்வாறு நமது கிறிஸ்தவ தனித்தன்மையை, உலகிலிருந்து நம்மை பிரித்துக் கொள்ளாமல் பாதுகாப்பது? என்ற வினாவிற்கு விடை தேட வேண்டும். நல் நோக்கம் கொண்ட ஒவ்வொரு கிறிஸ்தவனையும் இவ்வினா தொந்தரவு செய்ய வேண்டும். அண்மைக் கால திருத்தந்தையரின் பேச்சு மற்றும் உரையிலும் இக்கருத்து வந்துள்ளது. திருத்தந்தை பதினாறாம் பெனடிக்ட் இந்த தலைப்பைப் பற்றி (2011-ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 25-ஆம் நாளில் ப்ரெய்பெர்கில் (Freiburg) உள்ள) கத்தோலிக்கர்களிடம் பேசினார். அவருடைய பேச்சு கடுமையான எதிர்வினையைத் தூண்டியது, காரணம் செர்மானிய நாட்டைச் சார்ந்த கத்தோலிக்கர்களுடைய வாழ்வில் மட்டுமல்ல உலகில் உள்ள மற்ற பகுதிகளில் வாழும் கத்தோலிக்கர்கள் வாழ்விலும் உள்ள திறந்த காயத்தை அவருடைய பேச்சுத் தொடக்கூடியதாக இருந்தது. அவருடைய பேச்சின் சில கணிசமான பத்திகளை குறிப்பிடுகின்றேன்:

> *“தனது உண்மையான பணியைத் தேவைக்கேற்ப சாதிக்கும் பொருட்டு, திருஅவை அதன் உலகத்தன்மை நோக்கிச் செல்லும் போக்கிலிருந்து விடுபட்டு இறைவனை நோக்கி திறந்த உள்ளத்துடன் மீண்டும் திரும்ப எடுக்கும் முயற்சியை தொடர்ந்து புதுப்பிக்க வேண்டும். ...திருஅவையில் உலகப் போக்கு குறைவாக இருந்த பொழுது அதன் மறைபரப்புச் சாட்சிகள் மிக பிரகாசமாக ஒளிர்ந்தது என்பதை வரலாறு வெளிப்படுத்தியுள்ளது. அரசியல், பொருள் சுமைகளிலிருந்து, தனிச் சலுகையிலிருந்து விடுபட்டால், திருஅவை உண்மையான கிறிஸ்தவ வழியில் பெரும் சிறப்போடு உலகனைத்தையும் அடைய முடியும். உண்மையான*

*வெளித்தன்மையோடு இருக்க முடியும். இறை வழிபாடு, மனித சேவை போன்ற பணிகளை செய்வதற்கான தனது அழைத்தலை விடுதலை உணர்வோடு வாழ முடியும். ...மீண்டும் திருஅவையை துவங்குவதற்காக புதிய உத்திகளை கண்டுபிடிப்பது இங்கு கேள்வியல்ல. மாறாக, நமது தற்கால சூழலின் உண்மைத் தன்மையிலிருந்து எதையும் புறக்கணிக்காமல், அல்லது அடைத்து வைக்காமல், முற்றிலும் நிதானமான பகல் ஒளியில் நம்பிக்கையை இங்கேயே, இப்பொழுதே முழுமையாக வாழ, நம்பிக்கையை முழுமையாக பொருத்தமானதாக்க, நம்பிக்கையைச் சார்ந்திருப்பதைப் போன்று தோன்றக் கூடியவற்றை களைய வெறும் உத்திகளை அமைப்பது, முழுமையான வெளிப்படைத் தன்மையை தேடுவது தான் கேள்வியே. ஆனால் உண்மையில் இது வெறும் ஒரு மரபு அல்லது பழக்கம். வேறொரு வழியில் சொல்லவேண்டுமென்றால் நாம் வாழ்கின்ற தற்காலத்தில் மட்டுமல்ல, எல்லா யுகங்களிலும் வாழ்ந்த மக்களுக்கு கிறிஸ்தவ நம்பிக்கை ஒரு அவதூறு தான். நிலையான இறைவன் நம்மை அறிவது, பாதுகாப்பது; தொட்டு உணர முடியாதவர் குறிப்பிட்ட காலத்தில் தொட்டு உணரக்கூடியவராவது, மரணிக்கவே முடியாத ஒருவர் துயருற்று சிலுவையில் உயிர் துறப்பது, மரணிக்கக்கூடிய நமக்கு உயிர்ப்பையும், நிலை வாழ்வையும் உறுதியளிப்பது போன்றவை எந்த யுகத்திலும் வாழ்கின்ற மக்களுக்கும் ஒரு துணிச்சலான உரிமைக் கோரல் தான். ...சரியான அமைப்பில் உலகிலிருந்து விலக்கி கொள்வது எப்படி என்பதை கண்டுபிடித்து, திருஅவையின் உலகத் தன்மையிலிருந்து உறுதியாக நகர்வதற்கான சரியான நேரம் இது. இவ்வாறு கூறும் போது, நாட்டை விட்டு செல்வதாகவோ, உலகிலிருந்து விடுவித்துக் கொள்வதாகவே அர்த்தம் கொள்ளக் கூடாது. உலகப்பற்றின் சுமைகளை தளர்த்துவது தான் திருஅவையின் நிலைப்பாடே தவிர தொண்டு நடவடிக்கைகள், துன்புறுவோர், துன்புறுவோர் மீது அக்கறை கொண்டோர், தேவையில் உழல்வோருக்கு வாழ்வு தரும் வலிமையைக் கொடுப்பதில் தளர்வதல்ல. ...தனி நபராக, திருஅவையின் குழுமமாக உயர்ந்த அன்பின் எளிய சாட்சிகளாக நாம் வாழ்வோம். இந்த அன்பே இம் மண்ணில் எளியதும், கடினமானதுமாகும், காரணம் இந்த அன்பு வேண்டுவது தன்னையே கொடுக்கின்ற கொடையை தானே தவிர வேறொன்றுமில்லை.”*

**பெரும்பரப்புத்தொற்றுநோயின் சவால்களுக்கு மத்தியில் வாழ்வது**

11. “உலகத்தில், உலகத்தினராக அல்ல” என்ற கூற்று, எல்லாக் காலத்திலும் திருஅவைக்கும், அதன் உறுப்பினர்களுக்கும் ஒரு சவாலாகவே இருக்கின்றது. பாதுகாப்பாக இருக்கின்றோம் என்ற பொய்மை உறக்கத்திலிருந்து நம்மை விழித்தெழச் செய்யக் கூடிய ஆற்றல் தற்போதைய பெரும்பரப்புத்தொற்றுநோய்க்கு

இருக்கிறது. நமது அன்றாட மனித தேவைகளை குறித்து மட்டுமல்ல, சமய நம்பிக்கையுடையவர்களாக, திருஅவையின் உறுப்பினர்களாக இருப்பது குறித்தும் பல நலன்கள் நமக்கு வழங்கப்பட்டுள்ளதாக நினைத்து இருந்திருக்கலாம். ஒரே நாளில், தினத் திருப்பலி அல்லது வார திருப்பலி ஒப்புக் கொடுக்க முடியாமல் போயிற்று; மற்ற அருள்சாதனங்கள் கொண்டாட்டத்தில் பங்கு பெற இயலாமல், உடல் நலம் குன்றியோரை சந்திக்கவோ, இறந்தவரை நல்லடக்கம் செய்யவோ இயலாமல் போய்விட்டது. உடல் தனிமைப்படுத்துதல், நம்மை ஆன்மீகத் தனிமைப்படுத்துதலுக்கு இட்டுச் சென்று விட்டது. உடனடியாக நம் வாழ்வின் அத்தியாவசிய தேவை எவை என்ற கேள்வியைக் கேட்க வைத்துவிட்டது. அன்றாடம் உண்ணும் உணவு, பயன்படுத்தும் பொருள்கள் பற்றி மட்டுமல்ல, நாம் எதிர்பார்த்திருக்கும் பதிலை நம்முடைய வேண்டுதலுக்கு தராத இறைவனிடத்தில் நாம் கொண்டிருக்கும் நம்பிக்கையை குறித்தும் கேள்வி கேட்க வைத்துவிட்டது. யோபுவினுடைய விதியை பலரும் உடனடியாக அனுபவித்திருக்கலாம்; "ஆண்டவர் அளித்தார்; ஆண்டவர் எடுத்துக் கொண்டார்". கடந்த காலத்திலோ, நிகழ் காலத்திலோ இந்நிலையிலிருந்தாலும், யோபுடன் இணைந்து நம்மால், "ஆண்டவரது பெயர் போற்றப் பெறுக" என்று கூற இயலும்" (யோ 1:21)?.

12. நமது பகுதியில் உள்ள பல நாடுகளிலுள்ள வழிபாட்டுத் தலங்களோடு, நமது ஆலயங்களையும் சில கட்டுப்பாடுகளுடன் மீண்டும் திறக்க முடியும் என்பதை குறித்து மகிழ்ச்சிடைகிறோம். எனினும், முந்தைய நிலையைப் போல் இனி இருக்க முடியாது என்பதை ஒவ்வொருவராலும் உணர முடியும். கோவிட்-19-னுடைய ஆபத்தை உணர்ந்து விதிக்கப்பட்டிருக்கின்ற விதிமுறைகள் நம்முடைய வழிபாட்டின் சிறப்புத் தன்மையை மாற்றுகின்றன. சமூக இடைவெளி, அடிக்கடி துப்புரவு செய்தல், முகக்கவசங்கள், கையுறைகள் அணிதல், பாடுவது குறித்து ஒழுங்கு முறைகள், திருப்பலிக் கொண்டாட்டத்திற்கான நேரத்தை கட்டுபடுத்துதல் மற்றும் பல கட்டுப்பாடுகள், வழிபாட்டின் மகிழ்ச்சியை அனுபவிப்பதையும் தன் மகன் இயேசு கிறிஸ்து வழியாக நமக்காக இறைவன் புரிந்த பெரும் மீட்பின் செயல்களை நினைவு கூர்கின்றோம் என்ற உணர்வினையும் கடினமாக்குகின்றன. திருமுழுக்கு, உறுதிபூசுதல் அல்லது திருமணம் போன்ற இன்றியமையாத அருட்சாதனக் கொண்டாட்டங்கள் கூட எண்ணிக்கையில் குறைந்த பங்கேற்பாளர்களோடு நடத்தப்பட வேண்டும் என்பது வாழ்க்கை முன்பு போல் இருக்கப் போவது கிடையாது என்ற உணர்வையே கொடுக்கின்றது. சமூக இடைவெளியுடன் மிக குறைந்த அளவில் தான் தனி ஒப்புரவு அருட்சாதனம் வழங்க முடியும் என்பது அருள்சாதன வாழ்வின் இயல்பு தன்மை மறைந்துவிட்டது என்பதையே சுட்டிக் காட்டுகின்றது. வீடுகளிலோ, மருத்துவமனைகளிலோ உள்ள உடல் நலம் குன்றியோரை சந்திப்பதற்கு, நோயில் பூசுதல் அருட்சாதனத்தை வழங்குவதற்கும் விதிக்கப்பட்டிருக்கின்ற கடுமையான விதி முறைகள் மனித அரவணைப்பு மற்றும் மனித நெருக்கம் போன்றவற்றை இல்லாமையாக்கி விட்டனவா என்று எண்ணத் தோன்றுகிறது. இறந்தவரின் உடலுக்கு ஆசி வழங்குவது, இறந்தவரின் உடலை நல்லடக்கம் செய்வது போன்றவை கடுந்தேர்வாகிவிட்டதால் இறந்தவரின் குடும்ப உறுப்பினர்களையும், நண்பர்களையும் விரக்தியடைய செய்கின்றது. அன்னை

மரியா முன்பு அழவும், அமைதியுடன் தங்கள் துயர்களை ஆண்டவரிடத்தில் கொண்டு வருவதற்கும் உரிய இடம் தான் ஆலயம். அந்த ஆலயத்திற்கு எண்ணிக்கையில் குறைவானவர்களே வர வேண்டும் என்ற கட்டுபாடு ஆலயம் வர விரும்பும் சமய நம்பிக்கையாளர்களை கையறுநிலைக்குள்ளாகியுள்ளது.

## புதிய கட்டுவரம்புகளுக்கு பொருத்தமாக்கி கொள்தல்

13. கத்தோலிக்கத்தை கடைபிடிக்கிறேன் என்று சில கடமைகளை நிறைவேற்றுவதை விட நம்பிக்கையை குழுமத்தில் வாழ்வதே சிறந்தது என்பதை இந்த அனுபவங்களும், மற்றும் பல அனுபவங்களும் நமக்கு உணர்த்துகின்றன. சக நம்பிக்கையாளர்களுடன் இயல்பான உறவு வைத்துக் கொள்ள இயலாதச்சூழலில், ஒரே உடலாக இருப்பது என்பது, தனிமைப்படுத்தப்பட்ட சமயப் பயிற்சியின், கூட்டு மொத்தம் மட்டுமல்ல, தீவிரமாக பாதுகாக்கப்பட வேண்டிய எதார்த்தமுமாகும் என்பதை உணர்கிறோம், இந்த சூழ்நிலையில் எவ்வாறு இதனை சிறப்பாக செயல்படுத்த முடியும் என்பதே முக்கியமான சவால்களில் ஒன்று என்பதை எடுத்துரைக்க வேண்டும். அடுத்தவர்களை அணுகுவதற்கு மின்னணு ஊடகங்கள் நமக்கு உதவியாகயிருக்கின்றன. வழிபாட்டையும், சமய நிகழ்வுகளையும், பல வழிகளில் இறை வார்த்தையை பகிர்தலையும் ஊடகங்கள் வழியாக நேர்முக ஒளி பரப்புதல் செய்வதை நாம் தொடர்வோம். எனினும் உடலும் ஆன்மாவும் கொண்ட மனிதர்களும், சமய நம்பிக்கையுடையவர்களுமாகிய நமக்கு நேரடித் தொடர்பு தேவை தான். எதார்த்தக் குழும வாழ்க்கை அனுபவம் இல்லையென்றால், நமது உள்ளம் வறண்டுவிடக் கூடிய ஆபத்திற்குள்ளாவோம். அவரவர் அறையிலேயே, உணவு உண்டு, மற்ற குடும்ப உறுப்பினரோடு ஊடகங்கள் வழியாக மட்டும் பேசிக் கொண்டு வாழ்கின்ற குடும்பத்தை கற்பனை செய்து பாருங்கள். அத்தகைய குடும்பம் விரைவிலேயே உறவுகள் வறண்ட நிலைக்கு உள்ளாக்கப்படும். பணித்தளக் குழுமத்திலும், அங்கிருக்கின்ற பல்வேறு குழுக்களோடு கிறிஸ்தவர்களாகிய நாம் கொண்டிருக்கின்ற உறவுகளும் அப்படியே.

14. கோவிட்-19-க்கு, அதன் நோய்த்தொற்றுக்கு உள்ளானவர்களை உடல் அளவில் கொல்வதற்கு திறன் உண்டு. ஆனால் அதனையும் தாண்டி மனித உறவுகளை சிதைப்பதற்கும், கொல்வதற்கும் கூட அது திறன் கொண்டிருக்கிறது. முதியவர், பல நாள்களாக உடல் நலம் குன்றியோர், சிறப்புத் தேவையுடனிருப்பவர்கள் மற்றும் பலரும் ஆபத்தில் இருப்பவர்கள் என்று அறிவிக்கப்பட்டு இயல்பான சமூக வாழ்விலிருந்து விலக்கி வைக்கப்பட்டிருக்கிறார்கள். தற்போதைய நோய்த்தொற்று அச்சத்தினால், அடுத்தவாகள் நம்முடைய உடல் நலத்திற்கு அச்சுறுத்தல் கொடுப்பவர்களாகவே தெரிகின்றனர்; மற்றவர்களும் நம்மை அப்படியே பார்க்கின்றனர். இத்தகைய ஐயமுறுதல், விலக்கி வைத்தல் போன்றவை நிறைந்த பொதுச்சூழலை எதிர்த்து கிறிஸ்தவர்களாகிய நாம் நமது ஆற்றலுக்கேற்ப போராட வேண்டும். இயல்பான உடல் நலம் மற்றும் முன்மதியோடு செயல்பட வேண்டும்; நரம்பு தளர்ச்சி நோயுடையோர், அதிக கவலை கொண்டோர் விலகியே இருக்க வேண்டும்! உள் நாட்டு அதிகாரிகளுடைய சட்டங்களுக்கு நாம் கட்டுப்பட்டே வேண்டும். எனினும்

இதனை காரணம் காட்டி, அடித்தள மனித குடும்ப உறுப்பினர்களாக, ஒரே கிறிஸ்தவ சமூக உறுப்பினர்களாக ஒருவருக்கொருவரை பேணிக் காக்கின்ற கடமையிலிருந்து தவறக் கூடாது.

### பற்றுறுதியா பேரச்சமா

15. இயேசு கூறியதை போல நாம் முழுமையாக “இவ்வுலகில்” இருக்கிறோம், ஆனால் “உலகத்தினராக” அல்ல. நாம் வாழ்ந்து கொண்டிருக்கின்ற இந்த குறிப்பிட்டச் சூழலில் இதற்கு அர்த்தம் என்ன? இம்மடலின் தொடக்கத்தில் நான் குறிப்பிட்டதை போல, நம்மோடு வாழும் சக மனிதர்களுடன் நாமும் பெரும்பரப்புத்தொற்றுநோய் அச்சம், ஆபத்து மற்றும் பல அச்சுறுத்தல்களை உள்ளடக்கிய ஒரே வாழ்க்கை நிலையைப் பகிர்ந்து கொள்கின்றோம். இயேசு கிறிஸ்துவின் நம்பிக்கையாளர்களாக நாம் எவ்வாறு இந்தச் சூழலை சமாளிக்கின்றோம் என்பதே கேள்வி. நம்மை நிறைவாக அன்பு செய்யும் விண்ணகத் தந்தையினுடைய மகன்கள், மகள்கள் நாம் என்பதை நாமே புரிந்து கொள்ளும்படி இயேசு நமக்கு கற்பித்தார். அப்படியென்றால் எப்பொழுதும் நாம் மகிழ்ச்சியான வாழ்க்கை வாழ்கின்றோம் என்று அர்த்தமா? இல்லை! எனினும் இடுக்கண்கள் நேரிடும் சூழலிலும், உச்சக்கட்ட சோதனை நேரத்திலும் கூட அவரது கரங்களிலிருந்து நழுவிப் போவதில்லை என்று அர்த்தம். “தந்தையே, உம் கையில் என் உயிரை ஒப்படைக்கிறேன்” (லூக் 23:46) என்று தனது கடைசி மூச்சை விடுவதற்கு முன்பு கூறியபோது இந்த உண்மையை தனது வாழ்விலும், இறப்பிலும் இயேசுவே காட்டியுள்ளார். தனது வாழ்நாளில் பல்வேறு துன்பங்களை அனுபவித்த தூய பவுல், பின்வரும் வார்த்தைகள் வாயிலாக உரோமையர்களின் இதயங்களில் கிறிஸ்து இயேசு வழியாக அருளப்பட்ட கடவுளின் அன்பின் உண்மையை அழுத்தமாக கூறியுள்ளார்: “கிறிஸ்துவின் அன்பிலிருந்து நம்மைப் பிரிக்கக் கூடியது எது? வேதனையா? நெருக்கடியா? இன்னலா? பட்டினியா? ஆடையின்மையா? இடரா? சாவா?...... சாவோ, வாழ்வோ, வானதூதரோ, ஆட்சியாளரோ, நிகழ்வனவோ, வருவனவோ, வலிமைமிக்கவையோ, உன்னதத்தில் உள்ளவையோ, ஆழத்தில் உள்ளவையோ, வேறெந்தப் படைப்போ நம் ஆண்டவர் கிறிஸ்து இயேசுவின் வழியாய் அருளப்பட்ட கடவுளின் அன்பிலிருந்து நம்மைப் பிரிக்கவே முடியாது என்பது என் உறுதியான நம்பிக்கை” (உரோ 8:35, 38-39). நாமும் மற்ற அனைத்து மனிதர்களுடன் துன்புறுகின்றோம், நடுங்குகின்றோம். ஆனால் மரணத்திலும் கைவிடாத நம் ஆண்டவர் இயேசுவின் தந்தை இருக்கிறார் என்ற நம்பிக்கை நமக்கு இருக்கிறது. இந்த திடநம்பிக்கைக்கு உயிர்த்த ஆண்டவரே பற்றாணை.

16. 2020-ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 27-ஆம் நாள் திருத்தந்தை பிரான்ஸிஸ் நம் மனதை உருகச் செய்யும் “நகரம் மற்றும் உலகிற்கு” (Urbi et Orbi) என்ற கருத்தில் மன்றாடிய போது கடல்-கொடுங்காற்று நிகழ்வின் போது இயேசு தம் சீடர்களுக்கு கூறிய வார்த்தையில் நம் நம்பிக்கைக்கு அறைகூவல் விடுகிறார்:

*“ஏன் அஞ்சுகிறீர்கள்? உங்களுக்கு நம்பிக்கையில்லையா”? நமக்கு மீட்பு தேவை என்று நாம் உணர்கின்ற போது நம்பிக்கை பிறக்கிறது. நாம் தன்னிறைவு அடைந்தவர்கள் அல்ல; நம்மை நாமே இழந்து விட்டோம்; தொன்மைக் கால மாலுமிகளுக்கு விண்மீன் தேவைப்பட்டது போல நமக்கு ஆண்டவர் தேவை. நம் வாழ்க்கைப் படகிற்கு இயேசுவை அழைப்போம். நம் அச்சத்தை அவரிடத்தில் ஒப்படைப்போம். அவர் அதனை முறியடிப்பார். அவர் நம்மோடு படகில் இருந்தால் படகு உடையாது என்ற சீடர்களின் பட்டறிவை நாமும் பெறுவோம். நமக்கு ஏற்படும் அனைத்தையும், தீமையையும் கூட நல்லவையாக்குவார்; இதுவே கடவுளின் வலிமை. நம் புயல்களுக்கிடையே அவர் அமைதியைக் கொணர்வார்; காரணம் கடவுளுடன் வாழ்க்கை அழிவதேயில்லை.*

17. நம் வாழ்வின் சூறாவளிகளுக்கிடையே, ஒருமைப்பாடு, வலிமை தருவதற்கு ஆற்றல் வாய்ந்த எதிர் நோக்கு, ஆதரவு மற்றும் அனைத்தும் தடம் மாறியதைப் போன்று தோன்றும் இந்நேரத்திற்கான அர்த்தம் போன்றவற்றை உணர்ந்து மீண்டு எழுந்து கடைபிடிக்க ஆண்டவர் நம்மை கேட்கின்றார்; அழைப்பு விடுக்கின்றார். நமது உயிர்ப்பின் நம்பிக்கையை புதுப்பிக்க ஆண்டவர் தூண்டுகின்றார். நமக்கு ஒரு நங்கூரம் உண்டு: அவருடைய சிலுவையால் நாம் காப்பாற்றப்பட்டுள்ளோம். நமக்கு ஒரு திசைத் திருப்பி உண்டு: அவருடைய சிலுவையால் நாம் மீட்கப்பட்டுள்ளோம். நமக்கு ஒரு எதிர்நோக்கு உண்டு: அவருடைய சிலுவையால் நாம் நலமடைந்துள்ளோம் மற்றும் அணைக்கப்பட்டுள்ளோம். எனவே அவருடைய மீட்பின் அன்பிலிருந்து எதுவும், யாரும் நம்மைப் பிரிக்க இயலாது. தனித்திருக்கின்ற இந்நேரத்தில் யாரையும் சந்தித்து மென்மையாக பேச இயலாது துன்புறும் போது, பலவற்றை இழந்து தவிக்கின்ற போது நம்மை காப்பாற்றக் கூடிய அறிவிப்பிற்கு செவிமடுப்போம்: அவர் உயிர்த்து விட்டார், நம் பக்கத்தில் வாழ்கின்றார். நமக்காக காத்திருக்கும் வாழ்வை நாம் மீண்டும் கண்டுபிடிக்க, நம்மை கவனிப்பவர்களை நாமும் கவனிக்க, நம்மில் வாழும் அருளை கண்டுணர்ந்து வலுவூட்டி வளர்க்கும்படி தன் சிலுவையிலிருந்து ஆண்டவர் கேட்டுக் கொள்கிறார். நாம் என்றும் தடுமாறாமல் எரியும் திரியை அணைக்காமலிருப்போம் (எசா 42:3) எதிர்நோக்கு மீண்டும் பற்றியெரிய இசைவளிப்போம். (2020 மார்ச் 27-ஆம் நாள் திருத்தந்தை பிரான்ஸிஸ் தலைமையில் நடைபெற்ற சிறப்பு இறைவேண்டல்)

## இயேசு, நம் நம்பிக்கையைத் தொடங்கி வழி நடத்துபவரும் நிறைவு செய்பவரும்

18. அன்பு சகோதர, சகோதரிகளே! இந்த இன்னலானச் சூழலில், எரிந்து கொண்டிருந்த சோதோம் நகரை திரும்பிப் பார்த்து, “உப்புத் தூணாக மாறிய” (தொ 19:26) லோத்தின் மனைவி புரிந்த தவற்றை நாம் செய்யாமலிருப்போம். “நம் குடியுரிமை விண்ணகத்திலே தான்; அங்கிருந்து தான் மீட்பராம் ஆண்டவர் இயேசு கிறிஸ்து வருவாரெனக் காத்திருக்கின்றோம்” (பிலி 3:20) என்பதை அறிந்தவர்களாக எதார்த்தத்தை அப்படியே ஏற்றுக் கொண்டு முன்னோக்கி பார்ப்போம். நாம் சந்திக்க வேண்டிய அன்றாட சிக்கல்களை இது தீர்த்து

வைக்கப் போவதில்லை. எனினும், இவ்வுலகின் பேரிடர்களுக்கிடையே நம்பிக்கையின் ஒளியை இது கொடுக்கின்றது. சோர்வு, துன்புறுத்தப்படல் போன்ற துயர்களை சந்தித்த தொடக்கக் கால கிறிஸ்தவக் குழுமத்தை திடப்படுத்தும் பொருட்டு முழுமையான நம்பிக்கையின் சாட்சிகள் பட்டியலை எபிரேயருக்கு எழுதப்பட்ட மடல் நமக்கு தருகின்றது. (எபிரேயர் 11). அதன் பிறகு "சாட்சிகளின் மேகம்" என திரு மடல் தொடர்கின்றது: "எனவே, திரண்டு வரும் மேகம் போல் இத்தனை சாட்சிகள் நம்மைச் சூழ்ந்து நிற்க எந்தச் சுமையையும், நம்மைப் பற்றிக் கொண்டிருக்கும் எந்தப் பாவத்தையும் உதறிதள்ளிவிட்டு, நமக்குக் குறிப்பிட்டுள்ள பந்தயத்தில் மன உறுதியோடு ஓடுவோமாக. நம்பிக்கையைத் தொடங்கி வழி நடத்துபவரும் அதை நிறைவு செய்பவருமான இயேசுவின் மீது கண்களைப் பதிய வைப்போம். அவர் தாம் அடையவிருந்த மகிழ்ச்சியின் பொருட்டு, இழிவையும் பொருட்படுத்தாமல் சிலுவையை ஏற்றுக் கொண்டார். இப்போது, கடவுளது அரியணையின் வலப்பக்கத்தில் வீற்றிருக்கிறார்" (எபிரேயர் 12:1-2). நம் தனிப்பட்ட வாழ்வில் சந்திக்கும் பெரும்பரப்புத்தொற்றுநோயின் தொடர் அச்சுறுத்தல்கள், போர்கள், பொருளாதாரச் சிக்கல்கள், மற்றும் பிற துயரங்களோடு தொடர்ந்து வாழும் போது "நம்பிக்கையைத் தொடங்கி வழி நடத்துபவரும், அதை நிறைவு செய்பவருமான இயேசுவை" உற்று நோக்குவது நமக்கு விடுக்கப்படுகின்ற அறைகூவலாகும்".

19. இதை போன்றச் சூழல்களில், நாம் ஒருவருக்கொருவர் பகிர்ந்து கொள்ளக்கூடிய சிறந்தது என்னவென்றால் நம்பிக்கை தரும் செய்தியும், சாட்சியும் தான். நமது மோசமான அனுபவங்களைப் பற்றி தினமும் குறைக் கூறிக் கொண்டிருப்பது அர்த்தமற்றது. "கடந்ததை மறந்து விட்டு, முன்னிருப்பதைக் கண்முன் கொண்டு தொடர்ந்து ஓட" (பிலி 3:13). நாம் அழைக்கப்பட்டிருக்கிறோம். அன்றாடப் போராட்டங்களை கடந்து "இயேசு கிறிஸ்துவின் மூலம் கடவுள் மேலிருந்து விடுவிக்கும் அழைப்பான பரிசே" (பிலி 13:14) வாழ்வின் தொலைநோக்குப்பார்வையாகும். தனது பாடுகளுக்கு முன்பாக இயேசு மன்றாடிய இறைவேண்டலை மெய்யாகவே புரிந்து கொண்டால் அதுவே சிறந்த தேர்வாகும். "அவர்களை உலகிலிருந்து எடுத்து விட வேண்டுமென்று நான் வேண்டவில்லை; தீயோனிடமிருந்து அவர்களைக் காத்தருள வேண்டுமென்றே வேண்டுகிறேன். நான் உலகைச் சார்ந்தவனாய் இல்லாதது போல் அவர்களும் உலகைச் சார்ந்தவர்கள் அல்ல. உண்மையினால் அவர்களை உமக்கு அர்ப்பணமாக்கியருளும். உமது வார்த்தையே உண்மை"(யோ 17:15-17). உண்மையினால் அர்ப்பணமாக்குவதென்றால், நமது நம்பிக்கையைத் தொடங்கி வழி நடத்துபவரும், அதனை நிறைவு செய்பவருமான இயேசுவை உற்று நோக்குவதும், நாம் கடந்து செல்லவேண்டிய போராட்டங்கள் நம் இலக்குப்பார்வையை மங்கச் செய்யாமலிருப்பதும் ஆகும்.

20. "நமது நம்பிக்கையைத் தொடங்கி வழி நடத்துபவரும், அதனை நிறைவு செய்பவருமான இயேசுவை" உற்று நோக்குதல் என்பது, நாம் பிறருக்கு உதவி செய்வதற்காக எடுக்கின்ற முன்னெடுப்புகளில்தான் வெளிப்படுகிறது. பெரும்பரப்புத்தொற்றுநோயுள்ள இந்நேரத்தில் பலரும் எந்தவித ஆரவாரமின்றி

உண்மையான நற்செய்தித்தொண்டு புரிகின்றார்கள். கடுமையான நேரங்களில் அடுத்திருப்பவர்களுக்கும், மற்றவர்களுக்கும் உதவி புரிகின்றார்கள். இவர்களுக்கும், தொழில்சார்முறையில் பணியாற்றுபவர்களுக்கும் மற்றும் முன்களப் பணியாளர்களுக்கும் எனது நன்றியை தெரிவித்துக் கொள்ள விழைகின்றேன். நமது கிறிஸ்தவ சமூகங்களுக்கிடையே இத்தகைய உதவி செய்யும் கூட்டொருமைப்பாட்டை தனிநபராகவும், குழுமமாகவும் தொடர ஊக்குவிக்கின்றேன். தூய யாக்கோபு தனது திருமடலில் பயன்படுத்தும் வலிமையான வார்த்தைகளை கவனத்தில் கொள்வோம்: "என் சகோதர, சகோதரிகளே, தம்மிடம் நம்பிக்கை உண்டு எனச் சொல்லும் ஒருவர் அதைச் செயல்களிலே காட்டாவிட்டால், அதனால் பயன் என்ன? அந்த நம்பிக்கை அவரை மீட்க முடியுமா? ஒரு சகோதரன் அல்லது ஒரு சகோதரி போதிய உடையும் அன்றாட உணவும் இல்லாதிருக்கும்போது, அவர்கள் உடலுக்குத் தேவையானவை எவற்றையும் கொடாமல் உங்களுள் ஒருவர் அவர்களைப்பார்த்து, "நலமே சென்று வாருங்கள்; குளிர்காய்ந்து கொள்ளுங்கள்; பசியாற்றிக் கொள்ளுங்கள்;" என்பாரென்றால் அதனால் பயன் என்ன? அதைப் போலவே, நம்பிக்கையும் செயல்வடிவம் பெறாவிட்டால் தன்னிலே உயிரற்றதாயிருக்கும் (யாக் 2:14-17).

**அசாதாரணச்சூழலில் அருள்சாதன வாழ்வு**

20. விரைவில் நமது மேய்ப்பு மற்றும் கல்விச் செயல்பாடுகளை மறுவொழுங்கமைத்து, புதியக் கல்விஆண்டினை தொடங்கப் போகின்றோம். கடந்த காலத்தோடு ஒப்பிட்டுப் பார்க்கையில் பல செயல்பாடுகள் வேறுபட்டதாக காணப்படும். எனினும் கடவுளின் அருளால், நாம் அனைவரும் ஒன்றுபட்டு இக்கட்டான இச்சூழலில் சிறந்தவற்றை உருவாக்குவோம். திருப்பலிக்கான கால அட்டவணையை திட்டமிடுதல், திருமுழுக்கு, முதல் நற்கருணை, உறுதிபூசுதல், திருமணம் போன்ற திருஅருள்சாதனங்களை சிறிய குழுவாக கொண்டாடுவது, குறிப்பிட்ட எண்ணிக்கை கொண்ட குழுவிற்கு மறைக்கல்வி நடத்துவது, இயங்கலை ஊடகங்களை (online media) பயன்படுத்துகின்ற நேரங்களில் அதிகமான பொறுமை நமக்கு தேவை. இருப்பினும், நம்மிடையே உள்ள பல உயிர்ப்பண்புகள் சவால்களை சந்திக்க பயன்படுமென்று எனக்கு உறுதியாகத் தெரியும். கிறிஸ்துவினுடைய உடலை கட்டி எழுப்ப வேண்டிய கடமையையும் உரிமையையும் அருள்பணியாளர்கள், துறவிகள் மட்டுமல்ல, திருமுழுக்கு மற்றும் உறுதிப்பூசுதல் பெற்றுள்ள ஒவ்வொரு நம்பிக்கையாளர்களும் பெற்றிருக்கின்றோம். உண்மையான கிறிஸ்தவ அன்போடு மற்றவர்களோடு உறவு கொண்டுள்ள ஒவ்வொருவரும் குடும்பங்களிலும் மற்றும் குழுக்களிலும் ஆன்மீகப்பிணைப்பை வளர்ப்பதற்கு உதவமுடியும். நம்மை மட்டும் சார்ந்து அல்லது நமது சிறு வட்டத்திற்குள் மட்டும் செயல்படக்கூடிய மனநிலையிலிருந்து வெளிவர வேண்டும். ஐக்கிய அரபு அமீரகத்திலும், ஓமானிலும் பெரும்பான்மையான பொதுநிலையினர் ஈடுபடக்கூடிய செயல்பாடுகளை தொடங்குவதற்கு இதுதான் முக்கிய காரணம். இப்பெரும்பரப்புத்தொற்றுநோயினால் தற்காலிகமாக அவை தடைபட்டுள்ளன.

தற்போதைய சூழலில் நம்மால் இயன்றவைகளை செய்வதற்கு தூய ஆவியானவர் ஆற்றல் தருகிறார் என்பதில் நான் உறுதியாக இருக்கிறேன். நம்பிக்கையைத் தொடங்கி வழி நடத்துபவரும், அதனை நிறைவு செய்பவருமான நம் ஆண்டவர் இயேசுவை உற்று நோக்குகின்ற நம் ஒவ்வொருவருக்கும் அருளப்பட்டிருக்கின்ற உறுதியான நம்பிக்கையில் தொடர்ந்து பயணிப்போம்.

22. நான் ஏற்கனவே எழுதியுள்ளபடி, அனைத்து வழிபாட்டு நிகழ்வுகளையும் மீண்டும் தொடங்குவது என்பது தற்போது இயலாத ஒன்று. "கடன் திருநாள் திருப்பலி" என்று அழைக்கக்கூடிய திருப்பலிகளில் ஒன்றிற்குகூட பெரும்பாலோர் செல்வதற்கு வாய்ப்பு கிடைக்காமலிருக்கலாம். இப்பெரும்பரப்புத்தொற்றுநோய் மற்றும் அதன் விளைவாக ஏற்பட்டிருக்கும் தடைகள் தளர்வுறும் வரையில் ஞாயிறு கடன் திருநாள் திருப்பலி ஒப்புக்கொடுக்கும் கடமையிலிருந்து விலக்கு அளிக்கப்பட்டிருக்கின்றது. இதைப்போன்றே உயிர்ப்பு திருவிருந்து, ஆண்டு ஒப்புரவு அருள்சாதனம் போன்ற கடமையிலிருந்தும் விலக்கு அளிக்கப்படுகின்றது. எனினும் ஞாயிற்றுக்கிழமைகளில் இறைவனை வழிபடுகின்ற கடமையிலிருந்து விலக்கு கொடுக்க முடியாது. திருப்பலி ஒப்புக்கொடுக்க இயலவில்லையென்றாலும், திருமுழுக்குப் பெற்ற ஒவ்வொருவரும் நன்றி மன்றாட்டிற்காகவும், ஆராதனை புரிவதற்காகவும், பரிந்துரை இறைவேண்டலுக்காகவும் ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையிலும் குறிப்பிட்ட நேரத்தை அர்ப்பணிக்க வேண்டும். ஆலயத்திற்கு செல்ல இயலாதவர்கள், தனித்தோ அல்லது குடும்பத்தினருடனோ அல்லது சிறு குழுக்களாகவோ இணையம் வழியாக நேரடியாக ஒளிபரப்புச் செய்யப்படுகின்ற வழிபாடுகளில் பங்கு பெறும் பொருட்டு நம் பணித்தளங்கள் பலவற்றிலும் இப்பணித் தொடர கவனம் செலுத்துவோம்.

23. திருவிவிலியத்தை வாசியுங்கள். செபமாலை செபியுங்கள். ஆன்மீக அருள்செல்வமான நற்செய்தியின் இறைச்சொற்றொடர்களையும், திருப்பாடல்களில் ஒன்றையும் மனப்பாடம் செய்யுங்கள். ஒப்புரவு அருள்சாதனம் சிலக்கட்டுப்பாடுகளுடன் நிறைவேற்றப்படுவதால், குறிப்பிட்ட திருப்பலிகளுக்கு முன்பு ஒப்புரவு அருள்சாதன வழிபாடு நிறைவேற்றி பொது மன்னிப்பு வழங்க அருள் பணியாளர்களுக்கு அனுமதி கொடுத்துள்ளேன். மாதத்தில் எந்த நாளில் பொது மன்னிப்பு வழங்கப்படுகிறது, எவ்வாறு இறைமக்கள் அதற்கு தங்களையே தயார்படுத்திக் கொள்ள வேண்டும் போன்றவற்றை முன்கூட்டியே அவர்களுக்கு அறிவிக்கும்படி அருள்பணியாளர்களுக்கு அறிவுறுத்துகிறேன். எப்பொழுது, எப்படி மற்ற அருள்சாதனங்கள் நிறைவேற்றப்பட இயலும் என்பதை அவரவர்களிருக்கும் நாடு, அமீரகம் மற்றும் பணித்தளச் சூழலுக்கேற்ப ஒழுங்குப்படுத்தப்பட வேண்டும். எப்படி அதனை செயல்முறைப் படுத்துவது என்பதற்கான சில விதிமுறைகள் அருள்பணியாளர்களுக்கு கொடுக்கப்பட்டிருக்கின்றது.

**“விடியலிலும், காலையிலும் கடவுள் நம்மோடு”**

24. இறையியலார் டிட்ரிக் போன்ஹோபரின் (Dietrich Bonhoeffer) கவிதை மன்றாட்டின் வரிகளோடு இம்மடலை நிறைவு செய்ய விழைகின்றேன். எழுபத்தைந்து ஆண்டுகளுக்கு முன்பாக நடைபெற்ற நாசிசத்தினால் உயிர்த்தியாகம் செய்வதற்கு முன்பு, சிறையிலிருந்து தமது அன்பு உள்ளங்களுக்கு அவர் இதனை எழுதினார். நம்மில் பலருடைய வாழ்விற்கு இவ்வரிகள் பொருத்தமானதாக அமையும்.

*அன்புச் சக்திகளினால் வியத்தகுமுறையில் பாதுகாப்படைந்துள்ளோம்*

*என்ன நேர்ந்தாலும் அச்சமின்றி சந்திக்க காத்திருக்கின்றோம்*

*விடியலிலும் காலையிலும் கடவுள் எங்களோடு இருக்கின்றார்*

*மிக உறுதியாக ஒவ்வொரு நாளும் எங்களோடு இருக்கின்றார்.*

இவ்வுலகில் நாம் வாழ்கின்றோம். ஆனால் இவ்வுலகினராக அல்ல என்ற மறையுண்மையை ஆழமாக நாம் புரிந்து கொள்ள ஆவியானவர் நம் ஒவ்வொருவரையும் வழி நடத்தட்டும். இவ்வுண்மையை உணர்வதன் வாயிலாக எதிர்வருகின்ற மாதங்களிலும், ஆண்டுகளிலும் ஏற்படும் சவால்களை அமைதியுடன் சந்தித்து வாழ அகவிடுதலை அடைவோமாக.

உலக முடிவுவரை எந்நாளும் உங்களுடன் இருக்கிறேன் என்று வாக்குறுதி அளித்துள்ள (மத் 28:20) ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் பாதுகாப்பு உங்கள் அனைவர் மீதும் இருக்கும்படி அரேபிய அன்னையின் பரிந்துரை வாயிலாக இறைஞ்சுகின்றேன்.

உங்கள் அனைவருக்கும் எனது ஆசியுடன்

+மேதகு. பால் ஹிண்டர் கப்புச்சின் சபை

ஆயர். தென் அரேபியா

ஆயர் ஆட்சிப்பொறுப்பாளர். வட அரேபியா

அபுதாபி, 6 ஆகஸ்ட் 2020 (ஆண்டவருடைய தோற்ற மாற்றம்)